DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் வியாழன்கிழமை 03ம் நாள் சாட்சியாகிய கலையரசி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலையரசி | வயது | 51 |
| க/பெ. | கன்னிகுமார் | இனம் | பெண் |
| கிராமம் | இராணிப்பேட்டை | தொழில் | காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு–1, இராணிப்பேட்டை. |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.141/2012**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**முதல் விசாரணை 03.07.2025 அ.சா.7**

1. நான் தற்போது இராணிப்பேட்டை மாவட்ட குற்றப்பிரிவு–1 காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் 2012ம் வருடம் அரக்கோணம் மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது சிறப்பு உதவி ஆய்வாளர் உஷா என்பவர் ஒப்படைத்த குற்ற எண்.7/2012 வழக்கு கோப்பை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 1 முதல் 3 பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்தபோது சிறப்பு உதவி ஆய்வாளரிடம் தெரிவித்ததையே தெரிவித்ததால், தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

2. பிறகு பட்டியல் சாட்சி–4 ராகவன், பட்டியல் சாட்சி–5 கண்ணன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 2, 3 எதிரிகள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் அவர்களை கைது செய்யவில்லை. விசாரணையில் எதிரிகள் மீது முதல் நோக்கு

தோன்றியதால் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

3. புகார் பெறும்போது நான் காவல் நிலையத்தில் இருந்தேனா என்றால் இல்லை. வெளியில் அலுவல் பணியில் இருந்தேன். சிறப்பு உதவி ஆய்வாளர் சொன்னதின் பேரில் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சிகளை விசாரணை செய்து தாக்கல் செய்தேன்.

4. 1 முதல் 3 பட்டியல் சாட்சிகளிடம் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் விசாரித்தேன். எந்த இடத்தில் விசாரித்தேன் என்றால் ஞாபகம் இல்லை. புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 06.04.2012 ம் தேதி.

5. மனு ரசீது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 06.04.2012 தேதியில் வழங்கப்பட்டது. இந்த வழக்கில் எத்தனை எதிரிகள் என்றால் 3 எதிரிகள். எதிரிகளை காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தேனா என்றால் இல்லை. பட்டியல் சாட்சிகள்–4, 5 எந்த இடத்தில் விசாரித்தேன் என்றால் அவர்களது வீட்டில் விசாரித்தேன்.

6. பார்வை மகசர் தயார் செய்தேனா என்றால் இல்லை. நான் சம்பவயிடம் சென்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். சம்பவயிடத்தில் எதிரிகள், ஊர் பொது மக்கள் இருந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.

7. பட்டியல் சாட்சிகள்–4, 5, எதிரிகளுக்கு என்ன உறவு என்றால் தூரத்து உறவினர்கள். புகார்தாரருக்கு பட்டியல் சாட்சி–4 தாய்மாமா, பட்டியல் சாட்சி–5 தூரத்து உறவு. பட்டியல் சாட்சி–5 யை விசாரணை செய்த பிறகு தான் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

புகார்தாரர், 1வது எதிரியின் திருமணம் காதல் திருமணமா அல்லது பெரியோர்கள் ஏற்பாடு செய்த திருமணமா என்றால் பெரியவர்கள் ஏற்பாடு செய்த திருமணம். திருமணம் எந்த இடத்தில் நடைபெற்றது என்றால் புகார்தாரர் போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளாரா என்றால் தெரிவித்துள்ளார்.

8. சம்பவம் பற்றி தெரியும் என்று பட்டியல் சாட்சி–5 கண்ணன் போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளாரா என்றால் தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தில் கண்ணன் சாட்சியத்தில் போலீசார் அவரை விசாரிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார் என்றால் அது தவறு.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.